வரும்போது வங்கிகளை அணுகி கடன் கோருகின்றனர். அப்படி வங்கிகளை கடன் கேட்கும்போது அவர்கள் இந்த அடிதூரத்தை வைத்து நிராகரிக்கிறார்கள். ஆகையினாலே அதைமாற்றி ஏற்கெனவே இருக்கும் பழைய கிணறுகளுக்கு இந்த அடிநிர்ணயம் இல்லாமல் செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஒரு முயற்சியை மேற்கொள்ளுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே புதிய கிணறுகளை வெட்டுவது சம்பந்தமாகத்தான் இந்த நிபந்தனைகளை எல்லாம் நபார்டு வங்கி வைத்திருக்கிறது. பழைய கிணறுகளை ஆழப்படுத்துவதற்கும், அதை தூர் வாருவதற்கும் உள்ள பிரச்சினை சம்பந்தமாக மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்த யோசனைகளை நபார்டு வங்கியிடத்திலே நம்முடைய பொறியாளர்கள் கலந்து பேசி விவசாயிகளின் நலம் கருதி உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 12 திரு. சி. குழந்தைவேலு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

12—

புதுக்கோட்டைக்கு காவிரி நீர்.

* 335—திரு. சி. குழந்தைவேலு:

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) புதுக்கோட்டை மாவட்டம் குளத்தூர் தாலூகா விராலிமலை, இலுப்பூர் வழியாக புதுக்கோட்டைக்கு காவிரி நீர் கொண்டுவரும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இத்திட்டத்தை செயல்படுத்த ஒப்பந்தக்காரர்கள் நியமிக்க ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு பரிசீலிக்கப்பட்டு வருகிறது. தற்போது பணிகள் நடைபெற்று வருகின்றன.

1992 ஜனவரி 30]

(ஆ) புதுக்கோட்டை நகராட்சி, 3 பேரூராட்சிகள் மற்றும் 15 வழியோரக் கிராமங்களுக்கான அபிவிருத்திக் குடிநீர் வழங்கும் திட்டம் உலக வங்கி கடனுதவி திட்டத்தின்கீழ் செயலாக்குவதற்காக ரூ. 2192.04 இலட்சத்திற்கு அரசு ஆணை எண் 839, ந.நிகு. வ. துறை, நாள் 6-9-1990-ல் ஒப்புதல் அளிக்கப் பட்டது. நவம்பர் 1990 திங்களில் வந்த உலக வங்கிக் குழுவின் பரிந்துரையின்படி இத்திட்ட மதிப்பீடு ரூ. 2976.35 இலட்சங் களுக்கு திருத்தி அமைக்கப்பட்டு அரசின் மறு நிர்வாக ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டம் ஜூன் 1993-க்குள் முழுமை யாக நிறைவேற்றப்பட்டு பயனுக்கு கொண்டு வர உத்தேசிக்கப் பட்டுள்ளது.

முற்பகல் 10-35

திரு. சி. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் வெள்ளம் ஏற்பட்டபோதும், என்னுடைய குளத்தூர் தொகுதியில் கடும் வறட்சி ஏற்பட்டு, குடிநீர் கட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. நமது புரட்சித் தலைவியின் ஆட்சியில் இந்த காவிரி நீர் கொண்டுவரும் திட்டத்தைச் செயல் படுத்தினால், எனது தொகுதி மக்களுக்கு மிகவும் பயன் உள்ளதாக இருக்கும். ஆகவே, இந்தத் திட்டம் விரைவில் செயல் படுத்தப்படுமா என்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இத்திட்டத்தினை 1993-க்குள் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. விரைவில் முடிப்பதற்கு எல்லாவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 13 திரு. நா. சா. பழனிசாமி. மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்.